**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**STC.No. 333/2022**

**வழக்கு சாட்சி PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **பிரமிளா** | தொழில் | : இல்லத்தரசி |
| தகப்பனார் பெயர் | : ––––– | கணவர் பெயர் | : போஜராஜன் |
| கிராமம் | : மதுரை | இனம் | : பெண் |
| தாலுகா | : மதுரை | வயது | : 52/2026 |
| மாவட்டம் | : மதுரை | நாள் | : 25.05.2026 |

**( எதிரி மனுவின்பேரில் ஆஜரில் இல்லை)**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது மதுரையில் வசித்து வருகிறேன் . எனது சொந்த ஊர் பண்ணைக்காடு. நான் இல்லத்தரசியாக உள்ளேன். எதிரி விவேகானந்தன் எனது கணவரின் அண்ணன் ஆவார் . பண்ணைக்காட்டில் எனது கணவர் பெயரில் உள்ளது . 20.05. 2007ம் வருடம் எனது கணவர் காலமாகிவிட்ட காரணத்தால் பண்ணைக்காட்டில் உள்ள எனது கணவர் பெயரில் உள்ள வீட்டை எடுப்பதற்காக சென்றோம். தேதி நினைவில்லை. சுமார் 5–6 வருடங்களுக்கு முன்பு காலை 10.00 மணிக்கு மேல் மதியம் 12.00 மணிக்குள் எனது கணவர் பெயரில் உள்ள வீட்டை எடுப்பதற்காகச் சென்றோம். அப்போது விவேகானந்தனும், அவரது மனைவி சுமதி தகாத வார்த்தைகளால் பேசி அடிக்க வந்தார்கள் . எங்கள் வீட்டினுள் எங்களை நுழையவிடாமல் தடுத்தார்கள் . எங்களை வீட்டிற்க்குள் போகவிடாமல் எங்கள் வீட்டுச் சாவியை எடுத்து வைத்துக்கொண்டார்கள் . சம்பவம் தொடர்பாக நான் தாண்டிக்குடி காவல் நிலையத்தில் சம்பவ தினத்தன்றே புகார்

கொடுத்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் . என்னிடம் காட்டப்படும் புகாரானது நான் கொடுத்ததுதான் . அந்த புகார்மனு **அ.சா.ஆ.1** ஆகும். அந்த உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன் . புகாரை நான் தாண்டிக்குடி காவல்நிலையத்தில் கொடுத்தேன் என்றால் சரிதான். புகார் தொடர்பாக தாண்டிக்குடி காவல்நிலையத்தில் உடனே வழக்கு பதியப்பட்டதா என்றால் பதியப்பட்டது . புகார் தொடர்பாக திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சென்றேன் என்றால் சரிதான் , ஆனால் புகார் கொடுத்தேனா என்றால் நினைவில்லை. திண்டுக்கல் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு நான் , எனது பிள்ளைகள் , சுந்தரமூர்த்திநாயனாருடன் சென்றேன் . சுந்தரமூர்த்தி எனது நாத்தனார் கணவர் ஆவார் . சொத்து தொடர்பாக சுந்தரமூர்த்திக்கும், விவேகானந்தத்திற்கும் உரிமையில் வழக்கு நடைபெற்று வந்தது என்றால் சரிதான் . சொத்து தொடர்பாக நானோ, எனது கணவரோ எதிரி விவகானந்தன் மீது இந்த குற்ற வழக்கு தவிர வேறு வழக்கு தாக்கல் செய்யவில்லை . எனக்கும், விவேகானந்தத்திற்கும் சொத்து சம்பந்தமாக பிரச்சனை உள்ளது . நான் தாண்டிக்குடி காவல்நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் தாண்டிக்குடி காவல்நிலையத்தில் நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தால்தான் , திண்டுக்கல் சரக காவல்துறை துணைத்தலைவர் அலுவலகத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் அதுகுறித்த விபரங்கள் தெரியாது . புகாரானது தட்டச்சு செய்து கொடுக்கப்பட்டது . பலபேர் சொன்னதன் அடிப்படையில் புகாரை தட்டச்சு செய்து கொடுத்தேன்.

எனது கணவர் 2007ல் உடல்நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார். நான் 2007 காலகட்டத்தில் எனது அம்மாவுடன் மதுரையில் வசித்துவந்தேன் . புகார் தொடர்புடைய வீட்டில்

விவேகானந்தன் குடியிருக்கவில்லை, அதற்கு பக்கத்தில் உள்ள வீட்டில் தான் வசித்து வருகிறார் . சொத்தின் ஆவணங்கள் முறையாக இருப்பின் உரிமையியல் நீதிமன்றத்தில் நான் வழக்கு தாக்கல் செய்து உத்தரவு பெற முடியும் என்றாலும் , அத்தகைய உரிமையியல் வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. விவேகானந்தன் புகார் தொடர்புடைய வீட்டில் வசித்து வருகிறார் என்றாலும், முறையாக உரிமையியல் வழக்கு தாக்கல் செய்யாமல் போலீசார் துணை கொண்டு விவோகானந்தனை வீட்டில் இருந்து அகற்ற வேண்டி நான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சுமதி என்னை தகாத வார்த்தைகளால் திட்டிய விபரத்தை எனது புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அதே விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் கொடுத்த புகாரில் எந்த தேதியில் விவோகானந்தனும், அவரது மனைவியும் திட்டினார்கள் என்று தேதியை குறிப்பிட்டுச் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் தாண்டிக்குடி காவல்நிலையத்தில் புகார் கொடுத்து, விசாரணை செய்து எனது புகாரில் உண்மையில்லை என நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால் எனது அதிகார பலத்தை பயன்படுத்தி காவல்துணைத் தலைவர் அலுவலகத்தில் புகார் கொடுத்து சொத்தை மீட்க வேண்டி புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோன்று எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல . சுந்தரமூர்த்தி எனது நாத்தனாரின் கணவர் ஆவார் . சுந்தரமூர்த்தியின் தூண்டுதலின்பேரில் எதிரி மீது புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.05.25 15:28:30 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.